# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2254/45 - 2021 නොවැම්බර් මස 19 වැනි සිකුරාදා - 2021.11.19

*2254/45 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்*

*எனது இல.: - 4/2/1/91.*
*காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/4/2017/LO/213.*

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், தொம்பே பிரதேச செயலாளர் பிரிவில், மெத்தெகம கிராமத்தில் இல. 383, மெத்தெகம கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்படட் 2021.05.18 ஆந் திகதிய, ஆ.வ.கம. 4241 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்ட பெயர் மற்றும் விஸ்தீரணத்தைக் கொண்ட காணித்துண்டின் விபரம் பின்வருமாறு:

*01.* **துண்டு இல. 1**
காணியின் பெயர்: வேகெவத்தை அல்லது மாளிகாவத்தை; விபரம்: வீட்டுத்தோட்டம், தற்காலிக கட்டிடங்கள் 2 காணப்படுகின்றன; உரிமை கோருவோர்: காணி சீர்திருத்த ஆணைக்குழு; விஸ்தீரணம்: 5.2444 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2022 ஆண்டு பெப்புருவரி மாதம் 09 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு தொம்பே பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2022 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 02 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

என்.ஏ.ஏ.எஸ். நிஸ்ஸங்கஆரச்சி,
பிரதேச செயலாளர்,
தொம்பே பிரதேச செயலாளர் பிரிவு.

பிரதேச செயலகம்,
தொம்பே.
*2021, நவெம்பர் 15.*

*12 - 21*